"விடுதலை"
(சந்தாவிகிதம்)
[முன் பணமாக]
ஆண்டு ஒன்றுக்கு ரூ. 24-0-0
ஆறு மாதத்திற்கு ரூ. 12-0-0
மூன்று மாதத்திற்கு ரூ. 6-0-0
ஒரு மாதத்திற்கு ரூ. 2-2-0
சென்னைக்கு மட்டும்
ரூ. 2—0—0

Regd. No. 4789.
Phone No. 86977.

விலை அணா ஒன்று
இலங்கைக்கு 10 சதம்

திராவிட நாடு திராவிடருக்கே!

விடுதலை

"VIDUTHALAI"
(The Leading Tamil Daily)

(திராவிடர் தமிழ்த் தினசரி) Most Popular in the South

ஆறவுன்சு ஆட்சி மகிமை ?

புதுடெல்லி, மார்ச். 16— காமன்வெல்த் நாடுகளில் இந்தியா ஒன்றுதான் விவசாயத் துறையில் பின்னுற்றிருப்பதாக காமன்வெல்த் பொருளாதார கமிட்டியின் அறிக்கை குறிப்பிடுகிறது. மற்ற நாடுகள் விவசாயத் துறையில் அதிக லாபம் பெற்றிருக்கின்றனவாம்.

பக்கம் 13 | சென்னை : கரஞ் பங்குனிமீ 3உ (16—3—52) ஞாயிறு ○ ✻ ○ வெளியூர் : கரஞ் பங்குனிமீ 4உ (17—3—52) திங்கள் | இதழ் 256

★ கதர் சட்டையாட்சியில் பஞ்ச மக்களின் கதறல் ★

சேலம் ஜில்லாவில் பல பகுதிகளில் பஞ்சம் தலை விரித்தாடுகிறது

விவசாயிகள் வேலையில்லாமல் வெளியேறுகின்றனர்

ஜில்லா கலெக்டரிடம் புகார்

சேலம், மார்ச். 15—

கதர் சட்டைக்காரர்கள் ஆட்சியில் மக்கள் கண்ட பலன் பஞ்சம்தான். உண்ண உணவுக்கும் குடிக்கும் தண்ணீருக்கும் பெரும் பஞ்சம். இதற்கே இவ்வளவு நிண்டாட்டம் இருந்து வருகையில் உடைக்கும் உறைவிடத்திற்கும் மக்கள் படும் கஷ்டத்தைச் சொல்ல வேண்டியதில்லை.

ஆந்திராவில் பஞ்சம்—பஞ்சம் என்று மக்கள் கதறுகிறார்கள். இப்போது, சேலத்தில் மக்கள் பஞ்சத்தால் பல பகுதிகளில் துடிக்கிறார்கள். இதுபற்றி சேலம் ஜில்லா கலெக்டருக்கு சேலம் ஜில்லா விவசாயிகள் சங்கக் காரியதரிசி தேரழர் சி. துரைசாமிக் கவுண்டர் ஒரு கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அதில் மேற்படி ஜில்லா விலிருந்துவரும் உணவுப் பஞ்சத்தைக் குறித்தும் தண்ணீர்ப் பஞ்சத்தைக் குறித்தும் விளக்கியிருப்பதாகத் தெரிகிறது.

மேலும், அவர்தமது கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:- "சேலம் ஜில்லாவில் பல இடங்களில் உணவுப்பஞ்சமும், தண்ணீர்ப் பஞ்சமும் ஏற்பட்டுள்ளது. இது பெரும்பாலும் ஹைறேஸ் டிவிஷனல் இன்ஜினீயர் தாஹாகாவில் உள்ள ஜில்லா போர்டு தலைவர், ஊர், தாஹாகாவில் உள்ள ஜில்லா கலெக்டர், ஸ்ரீ கிருஷ்ணகிரி ஆகியோருடன் கலந்து தாஹாகாவில் ஒரு பகுதி, திருச்செங்கோடு தாலுகா முதலிய இடங்களைப் பார்த்துள்ளது. இப்பகுதிகளில் உள்ள சாகியிகள் வேலையில்லாமல் வெளியூர்களுக்குச் செல்கிறார்கள். எனவே, பஞ்ச நிவாரண வேலைகளை உடனடியாகத் துவக்க வேண்டும்" என்பதாகக்குறிப்பிட்டுள்ளார். ஜில்லாவில் பல இடங்களில் பஞ்சம் ஏற்பட்டுள்ளது என்பது பற்றி ஆலோசனை செய்து வருவதாகவும், இது சம்பந்தமாக அவர் தெரிவித்தார் என்றும் சொல்லப்படுகிறது.

'அனாமத்' சர்க்காரின் அனாமத் 'பட்ஜட்'

வரவுக்குமேல் செலவை அதிகரிக்கும் திட்டம்

86 லட்சம் துண்டு; வரிகுறைப்பும் இல்லை

சென்னை, மார்ச். 16—

சென்னை 'அனாமத்' சர்க்காரின் 1952-53-ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தை நிதியமைச்சர் தோழர் எ. பி. ஷெட்டிகேற்றுறை சென்னை சட்டசபைக் கூட்டத்தில் கொண்டுவந்து பேசினார். அது சமயத்தில் அவர் சமயத்தில் அத்திட்டத்தைக் குறித்து கூறியதாவது:

இத்திட்டத்தின்படி எதிர்பார்க்கப்படும் வரவு 63.90 கோடி ரூபாய் செலவு '64.76 கோடி ரூபாய் ஆக 86 லட்சம் ரூபாய் துண்டுவிழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1951-52-ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்துடன் இதை ஒப்பிட்டால், இத்திட்டம் சுமார் 42 லட்சம் ரூபாய் அதிகவருமானத்தையும் 118 லட்சம் ரூபாய் அதிக செலவையும் கொண்டதாக விளங்குகிறது என்பது விளங்கும்.

வங்க கவர்னரின் நன்கொடை

கல்கத்தா, மார்ச். 16—

மேற்கு வங்க கவர்னர் டாக்டர் எச். சி. முகர்ஜி தமக்குக் கிடைக்கும் சம்பளத்தில் ரூபா 500 மாத்திரம் தமது செலவுக்கு எடுத்துக்கொண்டு பாக்கி ரூ. 5000 பொது நலப்பணிகளுக்கு அளிக்க ஏற்பாடு செய்துள்ளார். தமது மனைவியின் பெயரால் பங்கபாலா முகர்ஜி நிதி என்பதாக ஒன்று ஏற்படுத்தியுள்ளார். இதற்கு ரூ. 50000 தரப்படுகிறது. இந்த நிதியிலிருந்து நர்ச்கள் உயர்தரப் படிப்புக்கு உதவி புரியப்படும். 1952-53-ல் இதே போன்ற பணிக்காக மேற்கொண்டு ரூ. 50000 இந்தச் சம்பளத்திலிருந்து அளிக்கப்படும்.

வங்க கவர்னரால் சங்கடம் !

புதுடில்லி, மார்ச். 16—

இப்போது மேற்குவங்க கவர்னராகவுள்ள டாக்டர் முகர்ஜி வங்காளவாசி. இவரை வங்க கவர்னராக நிடிக்கச்செய்தால் வங்காளிகள் இனிமேல் தங்களுக்கு வங்காளியே கவர்னராக வேண்டுமென்று பிடிவாதம்செய்யலாமென்றும், மற்றமாகாணங்களும் இதேபோல் கேட்கலாமென்றும் டில்லி சர்க்கார் அச்சம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. எனவே டாக்டர் முகர்ஜியை மாற்றிவிட ஏற்பாடுகள் நடக்குமென்று விஷயமறிந்த வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

புதிய காங்கிரசு எம். எல். ஏ-க்கள்

யாரையும் காணோம் என்கிறார் பிரதமர்

சென்னை, மார்ச். 16—

சட்டசபைக் காங்கிரசு கட்சித் தலைவர் தேர்தலுக்காகப் புதிய காங்கிரசு எம். எல். ஏ-க்களின் கூட்டம் நடத்தக்கோரி விக்கப்பட்டதாவென்று நிருபர்கள், 'பிரதமர் குமாரசாமி ராஜாவைக் கேட்டபோது அவர் அது சம்பந்தமாக கலந்து பேசவும் முடிவு செய்யவும் இப்போது யாரும் கிடைக்கவில்லை என்றார்.

அறிவிப்பு

★

மெதினில் ஏற்பட்டுள்ள கோளாறினால் இன்றை (16-3-52)ய 'விடுதலை' சற்று தாமதமாக வெளிவருகிறது. வாசகர்களும் ஏஜண்டுகளும் பொறுத்தருளக் கோருகிறோம்.

நிர்வாகி.

இந்திய எல்லையில் சீனத்துருப்புக்கள் ?

காலிம்பாங், மார்ச். 16—

இந்திய—நிபேத் எல்லையில் காலிம் பாங்குக்கு 90 மைல் தூரத்திலுள்ள பாரி ஒங் என்ற இடத்தில் சீனத்துருப்புக்கள் அணிதிரும்பியதாகக் கூறப்படுகிறது.

ஒரு அவுன்ஸ்!

சென்னை, மார்ச். 16—

இந்திய சர்க்கார் உணவு வைர்க்டர் ஜெனரல் நேற்று சென்னையிலிருந்து குமாரசாமி ராஜாவைச் சந்தித்துப் பேசியபின், பிரதமர் விசாரித்தபோது அரிசி ஒரு அவுன்ஸ் அதிகரிக்கப்படுமென்றும் ஆனால் எப்போது என்றும் கூறவில்லையென்றும், கணக்குப் போடப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

முதலாளித்துவ சர்க்கார் முதலாளிகளுக்கு பணிகிறது

விலைவாசி இறக்கத்தைத் தடுக்க இந்திய சர்க்கார் நடவடிக்கை

சிலபொருள்களின் ஏற்றுமதிவரி ரத்து

புதுடில்லி, மார்ச். 16—

கடலை எண்ணெய், ஒரு வகைவித்து, உரோமம் ஆகிய வைகளின் மீது இதுவரைவிதித்துவந்த ஏற்றுமதி வரியை இன்று முதல் ரத்து செய்திருப்பதாக இந்திய சர்க்கார் அறிக்கையொன்று கூறுகிறது.

இதுதவிர, பருத்தியின் மீது பேல் ஒன்றுக்கு ரூ. 400 வீதம் விதித்துவந்த ஏற்றுமதிவரியை ரூ. 200 ஆகக் குறைத்திருப்பதாகவும் ஷை அறிக்கை கூறுகிறது.

உலகமெங்கும் காணப்படும் விலை இறக்கத்தின் காரணமாக சர்க்கார் மேற்கண்ட முடிவுக்கு வந்ததாகக் காரணம் காட்டியிருக்கின்றனர் இந்திய சர்க்கார்.

இந்திய சர்க்காரின் இந்த நடவடிக்கையினாலும், மேற்கண்ட பொருள்களின் விலை இறக்கம் ஒரு நிலைக்கு வராமல் மேலும் இறங்கிக்கொண்டேபோகுமானால் மேற்கொண்டு விலை இறங்குவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை சர்க்கார் மேற்கொள்ளும் என்று சர்க்கார் அதிகாரவட்டாரத்தில் பேசிக் கொள்ளப்படுகிறது.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மாணவர் பணி

சிரியா சர்வகலாசாலை வழிகாட்டல்

டமாஸ்கஸ், மார்ச். 16—

சிரியாவில், முக்கியமாக கிராமப் பிரதேசங்களின் மக்களின்வாழ்க்கைத்தரத்தை உயர்த்த சிரியாவின் சர்வகலாசாலை மாணவர்கள் அதிகப்படி இந்த இயக்கத்தில் கலந்து கொள்ள ஒரு புதுச் சங்கம் ஏற்படுத்தியுள்ளனர்.

சர்வகலாசாலையுடன்சேர்க்கப்பட்ட அனேக கல்லூரிகளின் பிரதிநிதிகள் இப்புதிய சங்கத்தின் நிர்வாக கவுன்சிலின் அங்கத்தினர்கள். சிரியாவின் உள் நாட்டு இலாகா, விவசாயம், சுகாதாரம், கல்வி, சமூகத்தொண்டு முதலிய மந்திரிகள் இக்கவுன்சில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளனர்.

சங்கத்தின் நோக்கங்கள்:— 1. விவசாயின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு முனைவது; 2. சிரியாவிலுள்ள கிராம வாசிகளின், கல்வி, சுகாதாரம், விவசாயம் முதலிய பிரச்னைகளை அறிவதுடன் அவைகளை எவ்வாறு தீர்ப்பது என்பதற்கு போதிய ஏற்பாடு செய்தல்.

100-க்கு மேற்பட்ட இயந்திர முனைகள்

லண்டன், மார்ச். 16—

சமீபத்தில் எடுக்கப்பட்ட சர்வே கணக்குப்படி சுமார் 1000 க்கு மேற்பட்ட இயந்திர முனைகள் (சாபட்) அமெரிக்காவில் கைச்சொழில் பாதுகாப்புத்துறையில் உபயோகிக்கப்பட்டு வருவதாகத்தெரிகிறது.

இவைகள் பல அட்கள் செய்யக்கூடிய வேலையை எளிதில் சில விநாடிகளுக்குள் செய்து முடித்து விடுகின்றன.

இயந்திர ஆமைகள் காதலிக்கின்றன !

லண்டன், மார்ச். 16—

பிரிட்டிஷ் விஞ்ஞானி டாக்டர் கிரே வால்டர் இரு இயந்திர (ராபட்) ஆமைகளை சிருஷ்டித்திருக்கிறார்.

இவை ஒன்றை யொன்று 'காதலி'க்க ஆரம்பித்திருகின்றனவாம். அவைகளை பிரித்து விட்டால் ஒன்றை யொன்று தேட ஆரம்பித்து விடுகின்றனராம்.

இவைகளிலுள்ள பாட்டரி சக்தி குறைந்து விட்டால் அதைப் பூர்த்தி செய்துக் கொள்ள பாட்டரி ஹவுசிற்கு அவைகள் தானாகவே செல்கின்றனவாம்.

உணவுக்கப்பல்கள் வருகை

சென்னை, மார்ச். 16—

எஸ். எஸ். காதச்பாஷா என்ற கப்பல் சீனாவிலிருந்து 3,824 டன் அரிசியோடுடன், 1952 மார்ச் 13-ந் தேதியன்று சென்னைத் துறைமுகம் வந்துசேர்ந்தது. இந்த அரிசியோடு 2,824 டன் சென்னைக்கும் 1,000 டன் மைசூருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

எஸ். எஸ். ராபர்ட்-எ-லாரன்ஸ் என்ற கப்பல், அமெரிக்காவிலிருந்து 2,000 டன் கோதுமையுடன், 1952 மார்ச் 8-ந் தேதியன்று சென்னைத் துறைமுகம் வந்துசேர்ந்தது. இந்த கோதுமையில் 1,000 டன் சென்னைக்கும், 1,000 டன் மைசூருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

எஸ். எஸ். என்ஜின் எஸ்டென்னர் என்ற கப்பல் அமெரிக்காவிலிருந்து 2,000 டன் கோதுமையுடன், 1952 மார்ச் 19-ந் தேதியன்று சென்னைத் துறைமுகம் வந்து சேர்ந்தது. இந்த கோதுமையில் 1000 டன் சென்னைக்கும் 1,000 டன் மைசூருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மனைவி கம்யூனிஸ்டு அல்லாததால் மண விலக்கு

★

பான், மார்ச். 16—

மனைவி கம்யூனிஸ்ட் அல்லவேன்றும் இதனால் தன் குடும்பத்தையே அமைதியாக நடத்த முடிய வில்லை என்றும் தங்கள் இருவருக்கு மிடையே அடிக்கடி அபிப்பிராயபேதம் ஏற்பட்டு விடுவதாகவும் ஒரு கணவன் கோர்ட்டில் மனுச்செய்து மண விலக்கு பெற்று விட்டார்.

மாஸ்கோ உலகநாடுகள் பொருளாதார மாநாடு

அமெரிக்க மந்திரியின் நடுக்கம்

நியூயார்க், மார்ச். 16—

மாஸ்கோவில் நடத்தப்படும் உலகநாடுகள் பொருளாதார மாநாடு பற்றி அமெரிக்க வெளிநாட்டு விவகார (அரமூலம் அதனைச் செய்கிறான் சாங்க) மந்திரி ஆக்கிசன்வெளியிட்டுள்ள கருத்தாவது:-

அப்ரோப்பிய நாடுகளிடையே பலவீனத்தையும் குழப்பத்தையு முண்டாக்குவதற்காகத்தான் ரஷ்யாக் தலைநகரான மாஸ்கோவில் உலக நாடுகள் பொருளாதார மாநாடு நடத்தப்படுகிறது.

பொது மக்களிடையே செல்வாக்கும் புகழும் பெற்றவர்களை அம்மாநாட்டுக்கு அழைத்துச் செல்வதைக் தேடிக் கொள்ளமுயற்சிக்கப்படுகிறது. வியபாரர்களை அதிலிருந்து செய்ய கொள்ள வேண்டி

மார்ச்மார்க்ஸ் வாரம்

சென்னை, மார்ச். 16—

மார்ச் 15 முதல் 22-ந் தேதி வரை கார்ல்மார்க்ஸ் பெயரைக் கொண்டாட [illegible] கம்யூனிஸ்ட் கட்சி [illegible] தள்ளது. [illegible] 15-16-17, 18-19-20-21-22 [illegible] மலர், சொற்பொழிவு, [illegible] தாபரம் [illegible] கட்சியின் [illegible] கண்பதுபோல் [illegible] மாலை 6-30 [illegible] கூட்டங்கள் நடைபெறும்.